# அரையாண்டுப்பொதுத்தேர்வு – திசம்பர் 2017

ஆக்கம்: முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, நா.ம.மே.பள்ளி, ஏழாயிரம்பண்ணை, விருதுநகர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| **I** | **பின்வரும் வினாக்களுக்கு ஏற்றவகையில் விடை எழுதுக.** | **20 x 1 = 20** |
| 1 | மாணவர்கள் கல்வியறி**விலும்** ஒழுக்கத்**திலும்** சிறந்து விளங்க வேண்டும்.<br>(மேனிலை இரண்டாமாண்டு பொதுத்தமிழ்ப் பாடநூல் - பக்கம் 167, மார்ச்2009) | ½ + ½ |
| 2 | **குழந்தைத் திருமணம் / குழந்தைமணம் அரசால்** தடைசெய்யப்பட்டுவிட்டது. | ½ + ½ |
| 3 | **விடியற்காலையில் எழுந்து வேளாண்மை பார்க்கப்** போனான். | 1 |
| 4 | **உரவு =** வலிமை **உறவு =** சுற்றம் | ½ + ½ |
| 5 | பண்டைத் தமிழக மகளிர் தம் கணவன்மார்க்கு**ப்** பெருமைதேடி**த்**தந்தனர். | ½ + ½ |
| 6 | **ஆங்கிலமொழியில், எழுத்துப்பிழையின்றி விடையெழுத முயன்றிருப்பின் உரிய மதிப்பெண் வழங்குக.** | 1 |
| 7 | **கனை =** கனைத்தல் **கணை =** அம்பு<br>(மேனிலை இரண்டாமாண்டு பொதுத்தமிழ்ப் பாடநூல் - பக்கம் 166) | ½+½ |
| 8 | **மெலிவாக** இருப்பதே **அழகு** என்ற எண்ணம் பரவிவருகிறது.<br>(மேனிலை இரண்டாமாண்டு பொதுத்தமிழ்ப் பாடநூல் - பக்கம் 125, ஜுன்2006, 2007, 2009, 2010, செப்2011) | ½ + ½ |
| 9 | **கரும்புக்கொல்லைக்கு** அருகில் நாய் **குரைத்தது.**<br>(மேனிலை இரண்டாமாண்டு பொதுத்தமிழ் - ஜுன் 2008, 2009, 2010, செப்2013) | ½ + ½ |
| 10 | **த. நா. கு. வ. வா.** – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் | 1 |
| 11 | படிக்கும்படி சொன்னால் கண்டுகொள்ளாமல் இருப்பதா? | 1 |
| 12 | **எங்கள் குடும்பம், சிறிய குடும்பம்** | 1 |
| 13 | **பாலை – பாளை** (இருசொற்களும் இடம்பெறுமாறு பொருளுடையதொடர் அமைத்திருப்பின் உரிய மதிப்பெண் வழங்கவும்) | ½ + ½ |
| 14 | ப<u>ற</u>வை இ<u>ரை</u>யாகப் ப<u>யிறு</u> வகைகளைத் தி<u>ன்னு</u>ம்.<br>(மேனிலை இரண்டாமாண்டு பொதுத்தமிழ் - மார்ச்2006, ஜுன்2008, 2009, செப்2011, மார்ச்2013) | **1** |
| 15 | **"**ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் கடிதம் எழுது**",** என்று என் தந்தை சொன்னார்.<br>(மேனிலை இரண்டாமாண்டு பொதுத்தமிழ்ப் பாடநூல் - பக்கம் 130, மார்ச்2006, 2009, ஜுன்2011) | 1 |
| 16 | ஆ<u>ல</u>மரத்தின் வி<u>ழு</u>தினைப் பாம்பென்று கு<u>ர</u>ங்கு அஞ்சியது. | 1 |
| 17 | சாரை**<u>ப்</u>**பாம்பு குருவி**க்**கூட்டில் நுழைந்தது.<br>(மேனிலை இரண்டாமாண்டு பொதுத்தமிழ்நூல்- பக்கம் 159, அக்2006, மார்ச்2009) | ½ + ½ |
| 18 | வியப்புச்சுவை | 1 |
| 19 | அவள் எப்பள்ளியில் அறிவும் ஒழுக்கமும் கற்றாள்? **(அல்லது)**<br>அவள் அறிவும் ஒழுக்கமும் எங்கே கற்றாள்? **(அல்லது)**<br>அவள் வாழ்க்கைப்பள்ளியில் எவற்றைக்கற்றாள்? **(அல்லது)**<br>**(ஏற்ற பிறவகையில் வினா அமைத்திருப்பின் உரிய மதிப்பெண் வழங்குக)** | 1 |
| 20 | ஐம்புலன்= ஐந்து+புலன். மெய், வாய், கண், மூக்கு, செவி | 1 |
| **II.** | **எவையேனும் ஏழனுக்கு மட்டும். (கட்டாய வினாவெண் 30)** | **7 x 2 = 14** |
| 21 | * மன்னனுக்குத் தன் தேசமல்லால் பிற தேசங்களில் சிறப்புக்கிடைக்காது.<br>* ஆனால், கற்றவர் தாம் செல்லும் தேசங்களில் எல்லாம் சிறப்புப்பெறுவர். | 1<br>1 |
| 22 | * பெண்கள் எல்லாரும் செல்வமும் கல்வியும் பெற்றிருந்தனர்.<br>* வருந்திவந்தவர்க்கெல்லாம் வேண்டுவன வழங்கியும் விருந்தும் கொடுத்தனர். | 1<br>1 |
| 23 | * சுவையை மெய்ப்பாடு எனவும் வழங்குவர்.<br>* உள்ளத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி, நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படும்படி வெளிப்படுத்துதல். | 1<br>1 |

| | | |
|---|---|---|
| 24 | * ஆதரவற்ற சீதைக்காக அறப்போர்புரிந்து ஆவி நீத்த கழுகின்வேந்தன், “தெய்வமரணம் எய்தினான்” – இராமன்<br>* “தன்னுயிர் புகழ்க்கு விற்ற சடாயு” – அனுமன். | 1<br>1 |
| 25 | * கோவலன், கண்ணகி, மாதவி | 2 |
| 26 | * யானையைக்கொல்லாமலே யானைக்காலிலிருந்து முதியவனைக் காப்பாற்றுகிறான் கோவலன், கருணைமறவனாகக் காட்சியளிக்கிறான். | 2 |
| 27 | * ஒருவருடன் ஒருவர் மற்போர், வாட்போர்செய்து ஆற்றலைக் காட்டுவர்.<br>* மிருகங்களுடன் வீரர்கள் போரிட்டு அவைகளைக் கொல்வது அல்லது அவைகளால் கொல்லப்படுவது என்ற இரக்கமற்ற விளையாட்டுகள். | 1<br>1 |
| 28 | * உயிர்கள் நிலைத்த இன்பத்தில் மகிழவேண்டுமாயின் இன்பம் வழங்குதலைவிட, துன்பநீக்கம் செய்வதே முதற்கடன். | 2 |
| 29 | * பகைவர் முன்னின்று ஆற்றலோடு போர்புரிந்து உயிர்துறந்த வீரர்களை நினைவுகூர்தற்பொருட்டு அவர்கள் இறந்த இடங்களிலோ அல்லது வேறு இடங்களிலோ நடுகல் ஒன்றமைத்து விழாநடத்திப் பாராட்டுவர். | 2 |
| 30 | ‘உனக்குப்பிடிக்காத ஒன்றை, நீ பிறருக்குப்பிடிக்குமென்று நினைந்து செய்யாதே!’ | 2 |
| **III.** | **எவையேனும் ஏழனுக்கு மட்டும். (கட்டாய வினாவெண் 40)** | **7 x 3 = 21** |
| 31 | * என்காவலில் அமைந்த கங்கையாற்றைக்கடந்து இவர் போவாரோ?<br>* தோழன் என்று நாயகன் உரைத்தசொல் ஒரு சொல்லன்றோ?<br>* நன்றிமறவாத நாய்போல் தலைவனது ஆணைக்கடங்கி காவல்புரியும் ஏழையேன், அமர்க்களத்தில் இறந்தபின்னன்றோ பரதன் இராமனைப் பார்க்கவேண்டும்.. | 1<br>1<br>1 |
| 32 | * **படைவீரம்:** பகைவர் என் அடியின்கீழ் ஒதுங்கிநின்று ஈ என இரப்பாராயின் இந்த அரசாட்சியைக் கொடுப்பது பெரிதன்று. என் உயிரையே வேண்டினும் கொடுப்பேன்.<br>* **கொடைவீரம்:** என் ஆற்றலையும் துணிவையும் மதியாது இகழ்ந்த அறிவிலியா னவன் தூங்கும் புலியை இடறிய விழிமாற்றுத்திறனாளி போலப் பிழைத்து மீளுதல் அரிது | 1½<br>1½ |
| 33 | * கங்கைவேடனாகிய குகன், தனக்கினிய கங்கையாற்று மீனையும் கொம்புத்தேனையும் கொண்டுசென்று இராமனிடம் கொடுத்தான்.<br>* காளத்திவேடனாகிய கண்ணப்பன், தனக்கினிய இறைச்சியே தன் தலைவ னாகிய இறைவனுக்கும் இனியதாகும் என்று அதனை எடுத்து ஊட்டினான். | 1½<br>1½ |
| 34 | * பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே என்று பாடிய பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடவில்லை.<br>* தமிழிலக்கியவரலாற்றில் முதல்காப்பியமான சிலப்பதிகாரம் யாருடைய கதை? முரசுமுழங்குதானை மூவரும் கதையில் வந்தும் அந்த முடிமக்கள் கதையாகச் சிலப்பதிகாரம் விளங்கவில்லை.<br>* கண்ணகியின் கதையன்றோ சிலப்பதிகாரம்! கோவலன் குடிமக்களுள் ஒருவன். மாதவி பரத்தையரில் ஒருத்தி. இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதிகாரச் சித்திரம். | 1<br>1<br>1 |
| 35 | * உழைப்பினால் ஏற்பட்டுவிடும் உள்ளத்தேய்வைத் தூக்கத்தினால்மட்டும் போக்கிவிடமுடியாது.<br>* உழைத்தலுத்தவன், உடனடியாக உறக்கத்தைமட்டுமே தேடிக்கொள்ளாமல், நண்பர்களுடன் பேசிமகிழ்வது, குழந்தைகளுடன் விளையாடுவது என்ற ஏதேனும் ஒரு பொழுதுபோக்கிலே ஈடுபடல்வேண்டும்.<br>* பகலெல்லாம் பாடுபட்டவன், இரவு கண்விழிப்பது உடலுக்குச் சிறிதளவு கெடுதலைத்தரலாம். எனினும், கூத்துப்பார்த்ததில், கண்ணுக்கும் காதுக்கும் விருந்துபெற்றான். மற்றவர்கள் மகிழ்ந்திருக்கக் காண்கிறான். அது அவனுடைய மனத்திலே மூண்டுகிடந்த சோர்வுச்சுமையைக் குறைத்துவிடும். | 1<br>1<br>1 |

| | | |
|---|---|---|
| 36 | * இந்தியமண்ணில் தோன்றிய சமயங்களுள் புத்தமதமும் ஒன்று. சித்தார்த்தரைப் புத்தராக்கியதே அன்புதான்.புத்தரின் அன்புநெறி கிறித்துப்பிறப்புக்கும்முன்பே போரில்லாத அமைதிநெறியை வையகத்துக்குத் தந்தது.<br>* தாய் தன்உயிருக்கு ஆபத்துவருவதையும் கருதாது, தன் ஒரேபிள்ளையைப் பாதுகாப்பதுபோல எல்லாஉயிர்களிடமும் எல்லையற்ற அன்புகொள்ளவேண்டும்.<br>* பகையோ விரோதமோ இல்லாமல் மனிதர், அகில உலகினிடமும் எல்லையற்ற அன்புகொண்டு வாழவேண்டும் என்கிறது புத்தசமய வேதமான பிடகம். | 1<br>1<br>1 |
| 37 | * கல்வெட்டுகளில் காணப்படும் காலக்குறிப்புகள் எல்லம் அந்நாட்டு வேந்தரது ஆட்சியாண்டேயாகும். அரசனது ஆட்சியாண்டிற்குமுன் அவனுடைய வீரச்செய லும் சிறப்புப்பெயரும் இயற்பெயரும் பொறிக்கப்படுவது பழையவழக்கம்.<br>* மெய்க்கீர்த்தி அமைத்து ஆட்சியாண்டு வரும்முறை, முதல் இராசராசசோழ னால் முதலில் தொடங்கப்பட்டது. அரசனுடைய ஆட்சியாண்டு ஏறஏற மெய்க் கீர்த்தியும் புதியபுதிய செய்திகளோடு வளர்ந்துகொண்டே போகும்.<br>* மெய்க்கீர்த்தி துணைக்கொண்டு ஒவ்வொருவேந்தருடைய ஆட்சியிலும் எவ்வெவ்வாண்டில் எந்தவெந்த நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம். இவை வரலாற்றாராய்ச்சிக்குச் சிறந்த ஆதாரங்கள். | 1<br>1<br>1 |
| 38 | * சமணமுனிவர்கள் சங்கங்கள் அமைத்துத் தம் சமயத்தைப் பரப்பினர்.<br>* அவர்கள் உண்ணாநோன்பியற்றி உயிர்நீத்தவிடங்களில் அவர்களிடம் அன்பு பூண்ட அரசியல் தலைவர்களும் மாணவர்களும் அன்னாரின் பெயர்களையும் அருஞ்செயல்களையும் பொறித்துவைத்திருக்கின்றனர்.<br>* அத்தகைய கல்வெட்டுகள் செஞ்சிக்கு அடுத்த திருநாதர்குன்றிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஆனைமலையிலும் திருச்சிராப்பள்ளி குன்றிலும் காணப்படுகின்றன. | 1<br>1<br>1 |
| 39 | * சிறிதுநேரமாயினும் அடக்கவொடுக்கத்தோடிருந்து நம்மைப் படைத்த சிவபெருமானை நினைக்கவும், நம்மைப்போலவே அவ்வாண்டவனாற் படைக்கப்பட்ட உயிரிகளின் நன்மையைக் கருதவும்,<br>* அவை பசியாலும் நோயாலும் வருந்துவதைக்கண்டு மனங்கசிந்து இரங்கித் தம்மால் இயன்றவளவு அவற்றிற்கு ஒருகைப்பிடி உணவாவது ஒருகாசு மருந்தாவது உதவி அவற்றின் துன்பத்தைப் போக்கவும்<br>* தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார், ஔவைப்பிராட்டியார், காரைக்காலம்மையார், சேக்கிழார்பெருமான் முதலான அறிவுடையாரால் அருளிச்செய்யப்பட்டுள்ள அரும்பெருநூல்களை ஓதியுணரவும் முயற்சி வாய்ந்தவர்களாய் உள்ள ஆண்பெண் பாலாரைக் காண்பது அரிதினும் அரிதாய்ப் போய்விட்டது. | 1<br>1<br>1 |
| 40 | * கடவுளுக்குச் செய்யும் வழிபாடு<br>* பசுவிற்குப் புல் கொடுப்பது<br>* பசித்தவர்க்குச் சோறு வழங்குவது<br>* கேட்பவர் இன்பநலம்பெறும் இனியசொற்களை வழங்குதல் | 3 |
| **IV.** | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | **7 x 5 = 35** |
| 41 | * ‘ஒரு பிரமுகர்’ கதையைச் சுவைகுன்றாமல் **(ஒருபக்க அளவில்)** | 5 |
| | **(அல்லது)**<br>* ‘தேங்காய்த்துண்டுகள்’ கதையைச் சுவைகுன்றாமல் **(ஒருபக்க அளவில்)** | 5 |
| 42 | * ‘செங்கமலமும் ஒரு சோப்பும்’ என்னும் கதையின் ஒருபகுதியை நாடகமாக. (காட்சி, இடம், காலம், கதைமாந்தர், உரையாடல்) **(ஒருபக்க அளவில்)** | 5 |
| | **(அல்லது)**<br>* சீதாவுக்கும் அவள் சினேகிதியின் மாமியாருக்கும் இடையில் நடந்த உரையாடல். **(ஒருபக்க அளவில்)** | 5 |
| 43 | * ‘அற்புதராஜ்’ பாத்திரப்படைப்பு. **(ஒருபக்க அளவில்)** | 5 |
| | **(அல்லது)**<br>* ‘பாலாஜி’ பாத்திரம். **(ஒருபக்க அளவில்)** | 5 |
| | | 5 |

| | | |
|---|---|---|
| | **(அல்லது)**<br>* முருகதாசர் சுப்பிரமணியத்திடம் உதவிபெற்று, பிறகு வாழ்வில் உயர்ந்ததாய் ஒரு கற்பனைக்கதை. | **5** |
| 45 | * ஆசிரியர் குறிப்பு<br>* திரண்டகருத்து<br>* மையக்கருத்து | **2**<br>**2**<br>**1** |
| | **(அல்லது)**<br>* எதுகை, மோனை, இயைபு, முரண், சந்தம், அணி<br>(ஏற்புடைய எவையேனும் ஐந்து நயங்களுக்கு ஒருமதிப்பெண் வீதம் ) | **5** |
| 46 | * பழமொழியை விளக்கி வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.<br>**பழகப்பழகப் பாலும் புளிக்கும்** (அல்லது)<br>**சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.** | **5** |
| | **(அல்லது)**<br>கீழ்க்காணும் தலைப்பில் **(மரபு / புது)**க் கவிதை எழுதுக.<br>**தென்றல்** (அல்லது) **மரம் வளர்ப்போம்**<br>* **மரபுக்கவிதையாயின் குறள்வெண்பா** உட்பட எந்தவடிவத்தையும் ஏற்கலாம்.<br>* **புதுக்கவிதையாயின் ஹைக்கூ, சென்ரியூ** முதல் **லிமரைக்கூ** வரை எந்த வடிவத்தையும் ஏற்கலாம்.<br>* **கவிதையின் அளவு / அடிவரையறை:**<br>**மரபுக்கவிதை**யாயின் சிற்றெல்லை **இரண்டடி,** பேரெல்லை **ஐந்தடி.**<br>**புதுக்கவிதை**யாயின் சிற்றெல்லை **மூன்றடி,** பேரெல்லை **ஐந்தடி.** | **5** |
| 47 | * **தமிழாக்கம் தருக:**<br>அ) வாள் முனையைவிட எழுதுகோல் முனை வலிமையானது.<br>ஆ) ஆழந்தெரியாமல் காலை விடாதே<br>இ) மனமிருந்தால் வழியுண்டு<br>ஈ) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.<br>உ) குரைக்கிறநாய் கடிக்காது. | **1**<br>**1**<br>**1**<br>**1**<br>**1** |
| | **(அல்லது)**<br>அ) ''சிற்றூர்களே நம்நாட்டின் முதுகெலும்பு'' என்றார் காந்தியடிகள்.<br>ஆ) உணவுண்டபின் போதுமான அளவு நீர் அருந்தவேண்டும்.<br>இ) மெழுகுவத்தியை திடீரென்று வீசிய காற்று அணைத்துவிட்டது.<br>ஈ) சாலமோன் மன்னன் அவனது அறிவுக்கூர்மையால் அறியப்பட்டவன்.<br>உ) அரசு, சில திட்டங்களை அறிவித்தது.<br>**(இவற்றிற்கேற்ற பிற மொழிபெயர்ப்பு இருப்பினும் உரியமதிப்பெண் வழங்கவும்)** | **1**<br>**1**<br>**1**<br>**1**<br>**1** |




**ஆக்கம்:**
**முனைவர். அ. கிருஷ்ணமூர்த்தி, தமிழாசிரியர்,**
**நாடார் மகமை மேனிலைப்பள்ளி,**
**ஏழாயிரம்பண்ணை – 626 201,**
**சாத்தூர்(வழி), விருதுநகர் மாவட்டம்.**
**WhatsApp** 7806868246